**தலைப்பு 226 – குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 226 – குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 14 ஆம் திகதி கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பனவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், அமுல்ப்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 2,161.79 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை இதில் ரூபா 1,981.53 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 180.26 மில்லியன் அதாவது 8.34 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,045.32 | 1,038.52 | 6.80 | 0.65 |
| மூலதனம் | 1,116.47 | 943.01 | 173.46 | 15.54 |
| மொத்தம் | **2,161.79** | **1,981.53** | **180.26** | **8.34** |

**2.2 வருமானக் கணக்கு**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டிற்காக 20.03.02.07 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்காக ரூபா 15,000.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 15,604.07 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 604.07 மில்லியனால் அதாவது 4.03 சதவீதத்தினால் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | மதிப்பீட்டின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| 20.03.02.07 | 15,000.00 | 15,604.07 | 604.07 | 4.03 |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 22601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 36.00 | 35.99 | 29.00 | 29.14 | 154.00 | 131.89 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 7002/0000/00/0032/0016/000 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.39 மில்லியனாகும்.

**2.5 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழான 04 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10.86 மில்லியனாகும். விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0082/000 | 0.10 |
| 6000/0000/00/0002/0112/000 | 0.11 |

| | |
|---|---|
| 6000/0000/00/0016/0059/000 | 10.47 |
| 6000/0000/00/0008/0071/000 | 0.18 |
| | ------- |
| **மொத்தம்** | **10.86** |
| | ==== |

**2.6 கணக்காய்வு அவதானிப்பு**

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களிற்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம்முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | கணனி, துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (ii) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (iii) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (iv) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவின விடயங்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 100,000 மொத்தத் தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 08 செலவின விடயங்களுக்கு மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதியேற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச்செலவின விடயங்களிற்குரிய தேறிய நிதியேற்பாடுகளில் 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சளவினைக் கொண்டிருந்தது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 304,851 கூட்டுத்தொகையான 33 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 வருமானக் கணக்கு

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.03.02.07 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் வருமான மதிப்பீட்டை தயாரித்தல், வருமானங்களை சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற பணிகள் பொறுப்பளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டின் காசேட்டின் பிரகாரம் விசா வருமானம் மற்றும் கணனி முறைமையின் பிரகாரம் விசா வருமானம் என்பவற்றிற்கிடையே ரூபா 154,815 தேறிய வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) காசேட்டின் பிரகாரம் பிரஜை பிரிவின் வருமானம் மற்றும் திணைக்களத்தின் கணனி முறைமையின் பிரகாரம் பிரஜை வருமானம் என்பவற்றிற்கிடையே ரூபா 50,000 தேறிய வேறுபாடு காணப்பட்டது.

(இ) ஆண்டின் போது வீசா இன்றி தங்கியிருந்தவர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 31,978,040 காசேட்டில் பதியப்பட்டிருந்த போதிலும் கணனி முறைமை மூலம் அது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஒக்தோபர் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 39,345,806 (ETA Commission) வருமானம் மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

22601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 834,692 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 12 ஆண்டுகள் வரையான காலவீச்சிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.6 இணங்காமைகள்

#### 3.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | |
| (i) | நிதிப்பிரமாணம் 94(1) | - | 04 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதியேற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்களை ரூபா 45,732,804 இனால் விஞ்சி பொறுப்புக்களிற்கு கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 104(3) | 7,400,000 | முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களிற்கு மேல் தாமதமானால் பூர்வாங்க அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் வாகன விபத்தொன்று தொடர்பான பூர்வாங்க அறிக்கை 05 மாத தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 210(2) | 133,570 | திணைக்களத்தால் உரிய திகதிகளில் மின்சார விலைப்பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்யப்படாததனால் தாமதக் கட்டணம் இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) | நிதிப்பிரமாணம் 1645(அ) | - | வாகனம் விபத்திற்குள்ளாகியிருந்த போது நட்டம் ஏற்பட்ட திகதி, இடம், சாரதியின் பெயர், நட்டத்தின் விபரம் போன்றன வாகன லொக் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** | **2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம்** | | |
| | அதிகாரச்சட்டத்தின் 114 ஆம் பிரிவு மற்றும் 2015 யூலை 06 ஆம் திகதிய எஸ்ஈசீ/2015/05 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் சுற்றறிக்கை | - | இரட்டைப் பிரஜாவுரிமையை வழங்குதல் தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு நியமிக்கப்பட்டிருந்த குழு உறுப்பினர்கள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்த படிகளிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ)** | **தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு** | | |
| | 2010 சனவரி 04 ஆம் திகதிய என்எஸ்சீசீ/2/4/3/2/2/13 ஆம் இலக்க சுற்றறிக்கை | 6,697,955 | ஊக்குவிப்புப் படிகள் திட்டத்தின் நலன்களிற்கு உரித்துள்ள உத்தியோகத்தர்களிற்காக மேலதிக நேரப் படிகளோ அல்லது வேறு ஏதாவது படிகளோ செலுத்தப்பட முடியாத போதிலும் திணைக்களத்தின் அவ்வாறு உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. |

**3.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடுதல் மற்றும் செயற்திட்டத் தாமதங்கள் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடுதல்**

திணைக்களத்தினால் சட்ட அமுலாக்கல் நிலையத்தை கடான பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்காக ரூபா 60 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது அதில் எதுவும் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் உரிய வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஓய்வு அறை நிர்மாணித்தல் நடவடிக்கை 2016 யூன் மாதம் அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 வரையில் அதன் பௌதீக செயன்முன்னேற்றம் 85 சதவீதமாக இருந்தது.

(ii) கடவுச்சீட்டு மற்றும் விசா பிரிவின் வரிசை முகாமைத்துவ செயற்படுத்தல் செயற்திட்டம் 2016 ஒக்தோபர் மாதமளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 2016 திசெம்பர் 31 வரையிலும் அதன் பௌதீக செயன்முன்னேற்றம் 95 சதவீதமாக இருந்தது.

**3.8 செயலாற்றல்**

திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) 2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராத பின்வரும் நடவடிக்கைகள் வருடாந்த பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

| **பெறுகை வகை** | **மதிப்பிடப்பட்ட செலவினம்**<br>**ரூபா. மில்லியன்** |
|---|---|
| - தகவல் நிலையம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 14.4 |
| - பத்தரமுல்ல புதிய கட்டிடம் பாகப்பிரிவினை செய்தல் | 120.0 |
| - கணனி வலையமைப்பை அமுல்ப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் | 10.8 |
| - புதிய கட்டிடத்திற்காக ஆராய்ச்சிப் பிரிவை ஸ்தாபித்தல் | 0.5 |
| - Dash Boards & Queue management (1st to 7th floor branches) for new building at Battaramulla | 12.0 |

| | | |
|---|---|---|
| - | ரயர் கொள்வனவு செய்தல் மற்றும் வாகனத் திருத்தங்கள் | 3.5 |
| - | புதிய கட்டிடத்தில் தளபாடங்கள் மற்றும் அதற்குரிய வேலைகள் (கணனிகள், கடவுச்சீட்டுக்கள், மாற்றங்கள் மற்றும் ஓஎம் பிரிவு – 1, 2 ஆம் மாடிகள் மற்றும் 3, 4, 5, 6, 7 ஆம் மாடிகளிற்காக) | 90.90 |
| - | பத்தரமுல்ல புதிய கட்டிடத்திற்காக CCTV கமரா முறைமையை நிறுவுதல் | 23.14 |
| - | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1.2 |
| - | புதிய கட்டிடத்திற்கான தொலைபேசி இணைப்பு மற்றும் லீஸ் லைன் | 36.28 |
| - | ர்யசனறயசந வைநஅள கழச நெற டிரடைனைபெ யவ டீயவவயசயஅரடடய | 60.0 |
| - | இயந்திர கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 4.0 |

(ii) வருடாந்த பெறுகைத் திட்டத்திலோ அல்லது வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திலோ உள்ளடக்கப்பட்டிருக்காத கட்டுநாயக்க விமான நிலைய உத்தியோகத்தர்களின் பழைய விடுதி கட்டிடத்தை புதுப்பிப்பதற்காக ரூபா 0.3 மில்லியன் செலவிடப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கடவுச்சீட்டுக்களை வழங்குதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடவுச்சீட்டுக்களை ஏற்கும் சந்தர்ப்பங்களின் போது குறைபாடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதனால் 2016 செப்தெம்பர் மாதத்தில் மாத்திரம் விண்ணப்பங்களை கையேற்கும் போது ஏற்பட்டிருந்த குறைபாடுகளினால் கடவுச்சீட்டுக்கள் தயாரித்தல் ஒரு மாதத்தை விட அதிக காலம் தாமதமாகியிருந்த 108 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. 2016 நவம்பர் 08 ஆம் திகதி வரையிலும் அக்கடவுச்சீட்டுக்கள் தயாரிக்கப்படாதிருந்த 27 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ii) கண்டி பிராந்திய அலுவலகத்தில் 1,350 கடவுச்சீட்டுக்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் பதிவேடு பேணப்பட்டிருக்காததால் அவ்வாறு இரத்துச் செய்யப்பட்ட திகதி உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இரத்துச் செய்யப்பட்ட கடவுச்சீட்டுக்களின் ஒரு பகுதி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்ட போதிலும் அது கடவுச்சீட்டு பிரிவில் சரியானதென இனங்காணப்பட முடியாதிருந்தது. பிராந்திய அலுவலகத்தினால் 2016 சனவரி மாதம் முதல் செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் வெவ்வேறு காரணங்களின் அடிப்படையில் 248 கடவுச்சீட்டுக்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

(iii) தலைமை அலுவலகத்திலிருந்து பிராந்திய அலுவலகத்திற்கு வெற்றுக் கடவுச்சீட்டுக்கள் வழங்கும் போது அது தொடர்பாக பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்காததுடன் தலைமை அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட வெற்றுக் கடவுச்சீட்டுக்களை கையளிக்கும் ஆவணங்கள் கோவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) கடவுச்சீட்டு விண்ணப்பங்களிற்காக உரிய கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு நிராகரிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள்

காணப்பட்டன. அவ்வாறு இரத்துச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்களின் திகதி இறுதி சிறாப்பரின் அறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. நாளில் வழங்கப்பட்ட முதலாவது பற்றுச்சீட்டு இலக்கம், இறுதி பற்றுச்சீட்டு இலக்கம், மொத்த பற்றுச்சீட்டு எண்ணிக்கை, இரத்துச்செய்யப்பட்ட பற்றுச்சீட்டு விபரம் குறிப்பிட்டு பெறும் பற்றுச்சீட்டுப் புத்தகம், இரத்துச்செய்யப்பட்ட பற்றுச்சீட்டு எண்ணிக்கை தொடர்பில் குறிப்பிடப்பட்ட போதிலும் அப் பற்றுச்சீட்டுக்களில் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கப்பல் மூலம் துறைமுகத்திற்கு வருகின்ற நபர்களிற்கு இலங்கையில் தரையிறங்குவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் புத்தககமானது ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திலும் இரண்டு பிரதிகளை கொண்டிருப்பதுடன் அதில் மூலப்பிரதி கப்பலின் அங்கத்தவர்களிற்கு சமர்ப்பிவழங்கப்படுவதுடன் உபபிரதி அலுவலக பிரதியாக கோவைப்படுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் இந்த அனுமதிபத்திரங்கள் திருகோணமலை அலுவலகத்தில் தொடர் இலக்க அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்பாட்டுக் கைநூலிற்கமைய வழங்கப்படும் இந்த அனுமதிப்பத்திரங்கள் கப்பல் புறப்படும் போது மீளப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் வழங்கப்பட்ட அனைத்து அனுமதிப்பத்திரங்களினதும் மூலப்பிரதிகள் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு கோவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கணனி முறைமை அதாவது மென்பொருள் மற்றும் தொடர்புடைய தரவுகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமை, விசா தயாரித்தல், கடவுச்சீட்டு முறைமை மற்றும் பிரஜாவுரிமை வழங்கும் முறைமை மூலமாக தனியார் நிறுவனமொன்றுடன் 2003 யூன் 16 இல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அவ் உடன்படிக்கையின் பிரகாரம் Pssport, Boarder, Visa மற்றும் Citizenship முறைமை தொடர்பான தரவுகளிலிருந்து வருமான அறிக்கைகளைப் பெறுவதற்கு தனியார் நிறுவனத்திற்கு ரூபா 116,954,160 சேவைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும் கடந்த 5 வருடங்களின் வருமானக் கணக்கு பரிசோதனையின் போது அக் குறைபாடுகள் காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 03 உத்தியோகத்தர்களிடமிருந்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 217,702 அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.9 நட்டங்களும் சேதங்களும்

2015 மார்ச் 24 ஆம் திகதி ரூபா 7,400,000 இற்கு பெறப்பட்ட வாகனமொன்று 2016 ஒக்தோபர் 27 ஆம் திகதி விபத்திற்குள்ளாகி முழுமையாக நட்டமடைந்திருந்த போதிலும் அப்பெறுமதி காப்புறுதி நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கடவுச்சீட்டுகளை தபாலில் அனுப்புவதற்காக கண்டி பிரதான தபால் அலுவலகத்திலிருந்து 2016 பெப்ரவரி 16 ஆம் திகதி முதல் கடவுச்சீட்டுப் பிரிவில் பெறப்பட்டதனால் முன்னர் காணப்பட்ட தபால் முத்திரை இயந்திரத்திலிருந்து ரூபா 167,115 பணம் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அப் பணம் திணைக்களத்திற்கு பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.11 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளுக்காக பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு** | | **தொடர்புபட்ட விடயம்** |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2010<br>2011 | 6.5 (அ)<br>6.7 | திணைக்களத்தின் 7.6.7 பீ கணனி அறிக்கையின் பிரகாரம் 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வீசா இல்லாமல் நாட்டில் தங்கியிருந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 2,789 ஆக இருந்ததுடன் அவ்வாறு தங்கியிருந்தவர்களை சுற்றி வளைப்பதற்கும் கைது செய்வதற்கும் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளின் போது 159 பேரை மாத்திரம் நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அது வீசா இல்லாமல் தங்கியிருந்தவர்களின் எண்ணிக்கையில் 6 சதவீதம் மாத்திரமேயாகும். |

## 3.12 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு உள்ளது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 61 | 50 | 11 |
| (ii) | மூன்றாம் நிலை | 398 | 349 | 49 |
| (iii) | இரண்டாம் நிலை | 439 | 431 | 08 |
| (iv) | ஆரம்ப நிலை | 139 | 136 | 03 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 10 | 05 | 05 |
| | **மொத்தம்** | **1,047** | **971** | **76** |